

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி வடக்கு,கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவு போராட்டம்

பல வருடங்களாக எந்தவித விசாரணையும் இன்றி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரி வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்படும் மாபெரும் கையெழுத்து வேட்டை.

## உடனடியாக நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள்

- அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளின் வழக்குகள் அனுராதபுர நீதிமன்றத்திலிருந்து உடனடியாக வவுனியா நீதிமன்றத்திற்கு அல்லது யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மாற்றப்படல் வேண்டும்.
- உடனடியாக அனைத்து அரசியல் கைதிகளையும் பாரிய குற்றச்செயல்களுடன்(கொலை, களவு, கற்பழிப்பு, கடத்தல் )தொடர்புடைய குற்றவாளிகளுடன் தடுத்து வைப்பதை நிறுத்தி அவர்களிலிருந்து வேறுபடுத்தி பாதுகாப்பான சிறைகளில் தங்குவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## துரிதமாக மேற்கொள்ள வேண்டிய கோரிக்கைகள்

- சிறையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளினதும் வழக்குகள் உடனடியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.
- ஏற்கனவே இக் கைதிகள் பல வருடகாலமாக கிட்டத்தட்ட 10-15 வருடங்களுக்கு மேலாக சிறை தண்டனையையும், சிறைக்குள் பல சித்திரவதைகளையும் தண்டனையாக அனுபவித்தமை காரணமாக எந்தவித நிபந்தனைகளுமின்றி துரித கதியில் “நிபந்தனைகளுமின்றி அற்ற விடுதலை” செய்யப்பட்டு சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஏற்கனவே வடக்கு,கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறந்த வாழ்வாதாரம் மற்றும் தொழில்வாய்ப்பு என்பவற்றில் அதிக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

.குறிப்பு

- புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகளில் அங்கவீனராக இனங்காணப்பட்டவர்களுக்கு மிக விசேடமான தொழில்வாய்ப்பு மற்றும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.